மொழியாகக் கொண்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 29 தான் இருக்கின்றன. ஹையர் செகண்டரிப் பள்ளிகள் 30 அல்லது 40 இருக்கக்கூடும். 6, 7 வகுப்புகள் இருக்கிற பள்ளிகளில் ஒரே ஒரு ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்பை நடத்துவதற்குத்தான் அனுமதி தந்திருக்கிறோம். இன்றைக்கு மாநிலத்திலிருக்கும் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிகளில் சுமார் 200 அல்லது 300 பள்ளிக்கூடங்களுக்குத் தான் ஒரே ஒரு ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்பு நடத்துவதற்கு அனுமதி தந்திருக்கிறோம். ஆனால் கின்டர் கார்டன் என்று சொல்லக்கூடிய 5-வது வகுப்பு வரையுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை ஏராளமான அளவுக்குப் பெருகியிருக்கின்றன. அந்தப் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்குக் கூட ஒரு விதி முறை வைத்திருக்கிறோம். அந்தப் பள்ளிகளில் படிக்கின்றவர்களை நாம் 6-வது வகுப்பு வரைதான் அரசாங்கப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளலாம் என்றும், 6-வது வகுப்புக்குப் பிறகு நாம் சேர்க்க மாட்டோம் என்றும் ஒரு கடுமையான உத்தரவு போட்டிருக்கிறோம்.

Appeal from permanent teachers

* 103 *Q*.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of permanent teachers have made an appeal to the Government against the orders of ousting served by the Aided Managements in Ramanathapuram district;

(*b*) if so, the number of permanent teachers so affected; and

(*c*) the action taken thereon?

நிரந்தர பதவி பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மேல்முறையீடு

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகளால் கொடுக்கப்பட்ட வேலைநீக்க ஆணைகளை எதிர்த்து நிரந்தர பதவியைப் பெற்ற ஆசிரியர்கள் பலர் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளது உண்மையா?

1975 நவம்பர் 11]

(இ) ஆமெனில், அவ்வாறு பாதிக்கப்பட்ட நிரந்தரப் பதவி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சில ஆசிரியர்களிடமிருந்து மேல் முறையீடுகள் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளன.

(இ) 12 (பன்னிரெண்டு).

(உ) பள்ளிக் கல்வி இணை இயக்குநர் மேற்படி மேல் முறையீடுகளை பரிசீலித்து வருகிறார். மேல் முறையீடுகளின் மேல் இறுதி முடிவு எடுக்கும் வரை ஆசிரியர்களை பணியில் தொடர ஏ. தெக்கூர் மற்றும் கமுதியிலுள்ள பள்ளிகளின் நிர்வாகத்திற்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, நிரந்தரப் பதவி பெற்ற 12 ஆசிரியர்களை நிர்வாகத்தினர் வேலை நீக்கம் செய்திருப்பதாகச் சொன்னார்கள். இவ்வாறு ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்ததற்கு நிர்வாகத்தினர் என்ன காரணம் கூறுகிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதுதான் காரணம் என்று நிர்வாகத்தினர் கூறுகிறார்கள். இது குறித்து சில ஆசிரியர்களிடமிருந்து மேல் முறையீடுகள் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளன. அரசு பரிசீலித்து ஒரு முடிவு எடுக்கும் வரை, வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நிர்வாகத்திற்கு இணை பள்ளிக் கல்வி இயக்குநர் ஆணையிட்டிருக்கிறார்கள். அப்படி இணை இயக்குநர் ஆணையிட்டிருக்கிறார் என்றால், அரசு சம்பளம் தரும் என்றுதான் அர்த்தம்.

திரு. செ. முத்துசாமி : வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை நிர்வாகம் தொடர்ந்து பணியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அந்த உத்தரவை நிர்வாகம் ஏற்று, அந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வேலையில் சேர்த்திருக்கிறதா அல்லது மறுத்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை.